<u>**அசல் வழக்கு எண். 43/2019**</u>

14.11.2024

**பெயர் – சக்திவேல் (Dw3)**

<u>**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

(1) நான் ஏற்கனவே இந்த வழக்கில் முத்துச்சாமி, ரங்கசாமி ஆகியோர்கள் மீது வழக்கு நிலுவையில் இருந்ததால் நான் மேற்படி சொத்தை கிரையம் பெற்றதால் என்னையும் இந்த வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. அதன் அடிப்படையில் அந்த வழக்கில் ஆஜரானேன் என்றால் சரிதான். ஏற்கனவே 1, 2 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது நிலுவையில் உள்ளதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் தாவாச் சொத்துக்களை எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால் 03.03.2014 ம் தேதி கிரையம் பெற்றேன். நான் 03.03.2014 ம்தேதி கிரையம் பெற்ற போது கிரைய ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். நான் கிரையம் பெற்ற பிறகு ஏன் ? பிழை திருத்தம் தாக்கல் செய்தேன் என்றால் பொன்னுச்சாமியின் இன்சியல் மாறியதால் பிழை திருத்தல் ஆவணம் தாக்கல் செய்தேன். தாவாச் சொத்துக்களை கிரையம் பெற்ற மூல ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

(2) தாவாச் சொத்தின் மூல ஆவணங்களை கந்தசாமி 03.03.2010 ம் தேதி தாவாச் சொத்துக்களை கிரையம் பெற்று 1 ½ வருடங்கள் கழித்து தான் பத்திரத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து திரும்ப பெற்றார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நானும், கந்தசாமியும் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதால் இறந்து போன சின்னச்சாமி கவுண்டரின் சொத்துக்களை அபகரிக்க வேண்டி வேண்டுமென்றே பத்திரத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பெறாமலும், நான் பிழை திருத்தல் ஆவணம் கோரியும் வேண்டுமென்றே காலம் கடத்தி வந்தோம் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பி.,வா.சா.ஆ.12 தாவாச் சொத்தின் கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தையும், மூல ஆவணமான பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தையும், சின்னச்சாமி கவுண்டரின் சொத்து விவரத்தை படித்து பார்த்தேனா என்றால் சின்னச்சாமி கவுண்டரின் சொத்து விவரத்தை பார்க்கவில்லை.

(3) நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள சொத்து விவரங்கள் வேறு, சின்னச்சாமி கவுண்டரின் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் வேறு, வேறு என்றால் சரியல்ல இரண்டும் ஒன்றுதான். எனக்கு மூல ஆவணம் கிரையம் செய்து கொடுத்தது முத்துச்சாமி ஒரு பொது அதிகார ஆவணம் பெற்றதன் அடிப்படையில் தான் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதி முத்துச்சாமி சொத்துக்களை விற்பனை செய்து சின்னச்சாமி கவுண்டருக்கு பணத்தை கொடுத்து ரசீது ஏதேனும் கொடுத்துள்ளாரா என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 1ம் பிரதிவாதி முத்துச்சாமி

2ம் பிரதிவாதி கந்தசாமிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னிட்டு அதற்கான பிரதிப் பிரயோஜனங்கள் முழுவதும் சின்னச்சாமி கவுண்டருக்கு செல்லனதா என்றால் கந்தசாமி கவுன்டர் சின்னச்சாமிக் கவுண்டருக்கு பணத்தை கொடுத்திருப்பார்கள் என்று கூறினார். தாவாச்சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி முத்துச்சாமிக்கு பொது அதிகார ஆவணம் பி.வா.சா.ஆ.7 எழுதிக்கொடுத்த நிலையிலேயே அதை செயல்படுத்த விரும்பாமல் சின்னச்சாமிக் கவுண்டர் வாதி முருகேசன் பெயரில் இரண்டு உயில் ஆவணங்கள் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(4) சின்னச்சாமி கவுண்டர் வாதி முருகேசனுக்கு தாவாச் சொத்துக்களைப் பொறுத்து உயில் எழுதி வைத்ததால் தான் இந்த பொது அதிகார ஆவணத்தை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சின்னச்சாமிக் கவுண்டர் 21.04.2008 மற்றும் 22.01.2010 ம் தேதி உயில் எழுதி வைத்ததால் வாதிக்கு தான் தாவாச் சொத்து பாத்தியம் எனக்கு சொத்துக்களைப் பொறுத்து எந்த பாத்தியமும் ஏற்படாது நான் பெற்ற கிரையமும் செல்லாது என்றால் தவறு ஆகும். பொது அதிகார ஆவணத்தைக் கொண்டு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தது செல்லாது என்பதால் தான் இந்த வாதி 1, 2 பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அதேபோல தாவாச் சொத்துக்களைப் பொறுத்து வழக்கு நிலுவையில் உள்ள நிலையிலேயே அதில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 3, 4 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஒரு கிரைய ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் அது சட்டப்படி வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. சின்னச்சாமி கவுண்டர் ஏற்படுத்திக் கொடுத்த உயில் ஆவணங்களை நான் படித்துப் பார்க்கவில்லை. தாவாச் சொத்தில் ஒரு கருப்பராய சுவாமி கோவில் உள்ளதா என்றால் உள்ளது.

(5) மேற்படி கோவிலை யார் பராமரித்து வந்தார் என்றால் சின்னச்சாமி கவுண்டர் 2007 ம் ஆண்டு அவர் இருந்த வரை பராமரித்து வந்தார். அதற்கு பின்னிட்டு முத்துச்சாமி பராமரித்து வந்தார். அது எனக்கு நேரடியாக தெரியும். மேற்படி கோவிலின் பூஜைகளை 2007 ம் ஆண்டு முதல் முத்துச்சாமி தான் செய்து வந்தார். அதற்கு பின்னிட்டு 2010 ம் ஆண்டு முதல் கந்தசாமி கோவில் பூஜைகளை செய்து வந்தார். கந்தசாமி மற்றும் முத்துச்சாமி நீதிமன்றத்தில் என்ன சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அவர்கள் அளித்த சாட்சியத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. நான் சொன்னபடி தாவாச் சொத்தில் உள்ள கோவிலை சின்னச்சாமிக் கவுண்டர் தான் பூஜை செய்து பராமரித்து வந்தார் மேற்படி கோவில் செலவினங்களுக்காக தாவாச் சொத்துக்கள் முழுவதையும் இந்த வாதி பெயரில் எழுதி வைத்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டுதான் கோவிலை பராமரித்து வர வேண்டும் என்று கண்டு உயில் ஆவணத்தை சின்னச்சாமி 21.04.2008 மற்றும் 22.01.2010 ம் தேதி உயில் எழுதி வைத்தார் என்றால் அது தவறு. அது பற்றி எனக்கு தெரியாது.

(6) நான் சொன்னபடி 1, 2 பிரதிவாதிகள் தாவாச் சொத்துக்களில் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்தது கிடையாது, அதில் உள்ள கோவில்களை 1, 2 பிரதிவாதிகள் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல அவர்கள் தான் பராமரித்து வருகிறார்கள். தாவாச் சொத்துக்கள் முழுவதிலும் வாதி தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் நான் தாவாச் சொத்துக்களில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல நான் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். நான் தாவாச் சொத்துக்களில் சுவாதீனத்தில் உள்ளேன் என்பதை காட்ட எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் தாவாச் சொத்தில் சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் தான் சுவாதீனம் குறித்து என்னால் எந்த ஆவணமும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. நான் 14.12.2012 ம் தேதி முதல் வாதியின் சுவாதீனத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்திய காரணத்தினால் தான் என் மீதும் 1, 2, 4 பிரதிவாதிகள் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கந்தசாமிக் கவுண்டரிடம் இருந்து பெற்ற கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் வாதிக்கு உயில்படி பாத்தியம் என்றும், நான் பெற்ற கிரையம் செல்லாது என்று வாதி குறிப்பிட்டுள்ள நிலையில் நான் பெற்ற கிரையம் செல்லும் என்று கோரி வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கில் நான் பெற்ற கிரையம் செல்லும் என்று குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(7) தாவாச் சொத்துக்களைப் பொறுத்து பட்டா, சிட்டா உள்ளிட்ட ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் கந்தசாமிக் கவுண்டர் பெயரில் உள்ளது. எனது பெயரில் தற்போது வரை எந்த பட்டா, சிட்டாவும் மாற்றம் செய்யவில்லை என்றால் நான் மாற்ற செய்ய சென்ற போது வழக்கு நிலுவையில் இருந்ததால் மாற்றவில்லை. தாவாச் சொத்துக்களில் நான் சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் தான் பட்டா, சிட்டா உள்ளிட்ட ஆவணங்களில் எனது பெயரில் மாற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல வழக்கு இருந்ததால் தான் மாற்றம் செய்யவில்லை. தாவாச் சொத்துக்களின் சிட்டா கந்தசாமி பெயரில் உள்ளது என்பதை காட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவாச் சொத்துக்களைப் பொறுத்து சின்னச்சாமிக் கவுண்டர் 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்த பொது அதிகார ஆவணம் செல்லாது என்ற நிலையிலும் அந்த ஆவணத்தைப் பொறுத்து 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்ற கிரைய ஆவணம் செல்லாது என்ற நிலையிலும் அதன் தொடர்ச்சியாக நான் பெற்ற கிரைய ஆவணமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்களைப்பொறுத்து வழக்கு நிலுவையில் உள்ள நிலையிலும் தாவாச் சொத்துக்களைப் பொறுத்த உரிமை முடிவு செய்யப்படாத நிலையிலும் தாவாச் சொத்துக்களைப் பொறுத்து 03.03.2014 ம் தேதி நான் பெற்ற கிரைய ஆவணமும், அதன் தொடர்ச்சியாக 19.05.2014 ம் தேதி எழுதிய பிழை திருத்தல் ஆவணமும் பி.வா.சா.ஆ.12

மற்றும் பி.வா.சா.ஆ.13 ஆகிய ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றும், தாவாப்படி வாதிக்கு தான் தாவாச் சொத்துக்கள் சொந்தம் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.11.14 08:42:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்